[24th March 1960

SRI K. ANBAZHAGAN : அந்த நிலம் ஆர்ஜிதம் செய்ததிலிருந்து அதற்குப் பின்னர் இந்தக் கட்டிடம் கட்டிய நேரத்திலும் அதற்குப் பின்னர் அரசாங்கத்தை அனுமதி கேட்ட நேரத்திலும், டிரஸ்டுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலே நடைபெற்ற கடிதப் போக்குவரத்துக்களை அரசாங்கம் சட்டமன்ற உறுப்பினர்கள் பார்வைக்கு வைக்க அனுமதிக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் உடனே இதற்குப் பதில் சொல்ல முடியாது. அந்தக் கடிதப் போக்குவரத்து இப்பொழுது என்னிடம் இல்லை. அவைகளைப் பார்த்து, அவைகளை அங்கத்தினர்கள் பார்வைக்கு வைப்பது அவசியமானால், தனியாக ஒரு கேள்வி போட்டால் அதுபற்றிக் கவனிக்கப்படும்.

Holiday Homes for school children

* 457 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is a proposal by the Government to start Holiday Homes for school children at Ootacamund, Kodaikanal, Courtallam, Ercaud, etc.?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

SRI S. LAZAR : மூன்றாவது திட்டத்திலாவது இதற்கு இடம் கொடுக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மூன்றாவது திட்டத்தைப் பற்றி பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். அந்தக் குழுவில் அங்கத்தினரும் அங்கம் வகிக்கிறார்கள். அந்தக் குழுவினிடம் அந்த ஆலோசனையை சொன்னால், அந்தக் குழு அதைப் பரிசீலனை செய்யும் என்று நினைக்கிறேன்.

Legislative Assembly meeting at Ootacamund

* 467 Q—SRI K. ANBAZHAGAN (on behalf of Dr. SRIMATHI SATHIYAVANIMUTHU) : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு சட்ட சபையை உதகையில் கூட்ட அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) இல்லையாயின் காரணமென்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) சட்ட சபையை இந்த ஆண்டு உதகையில் கூட்ட அரசாங்கத்தாருக்கு உத்தேசம் இல்லை.

(ஆ) அங்கத்தினர்கள் சட்ட சபையை உதகையில் இந்த ஆண்டில் கூட்டவேண்டுமென்ற விருப்பம் தெரிவிக்காதது தான் காரணம்.

SRI A. A. RASHEED : Sir, has the attention of the Government been drawn to the propaganda carried on by political parties that their agitation was responsible for the Government dropping their idea of going to Ooty?

THE HON. SRI C. SUBRAMANIAM : There are some people trying to show that they are responsible for the rising of the sun every day. He cannot be going on contradicting each and everything.